**செ. கு. எண்**:25

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 22.1.2013

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், புனித தோமையர் மலை அருகே மெட்ரோ ரயில் தொடர்பான பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, 10.1.2013 அன்று கிரேன் விபத்து ஏற்பட்டு திம்பல் ஷா என்னும் தொழிலாளர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த திம்பல் ஷா அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் இரு நபர்கள் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிந்து நான் வருத்தமடைந்தேன். இவர்கள் இருவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான திம்பல் ஷா அவர்களின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**